(முற்பகல் 11-30)

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாநகராட்சிகளுக்கு நடைபெற இருக்கின்ற தேர்தலை ஒரு ஆண்டு தள்ளி வைக்கிற சட்டத்தை ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம்.

திரு. வை. பாலசந்திரன்: தலைவரவர்களே, இந்தச் சட்டத்தை அறிமுக நிலையிலே நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் ஒரே காரணம்தான் என்றாலும், காரணம் ஒன்றானாலும் காலமும் வேறு, கர்த்தாவும் வேறு. அறிமுக நிலையில் அனைவரும் எதிர்த்ததற்கு ஆய்வு நிலையில் ஒருமுகமாகப் பதில் தருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஆ) அழகப்பா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழக (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

1987 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி

கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,92,56,86 000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

Thiru M. SUNDARADAS: Mr. Speaker, Sir, to discuss the need to construct a bus stand at Marthandam in Kanyakumari District, I move—

"that the allotment of Rs. 1,92,56,86,000 under Demand No. 28, Community Development Projects and Municipal Administration, be reduced by Rs. 100".

திரு. சோ. மா. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சி 33-ம் வட்டம், அண்ணாநகர் மேற்கு விரிவாக்கத்தின்கீழ் பிரதான சாலையில் தெருவிளக்கு அமைப்பதுபற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:—

"மானியக் கோரிக்கை எண். 28—சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும், நகராட்சி நிர்வாகமும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,92,56,86,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. கே. சுப்பராயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் நகராட்சி நிர்வாகத்தின் நடைமுறைகள் பற்றி கோவை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் 19 நகராட்சி